தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
**Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723**
[Impact Factor: 9.47] Monthly, Peer-Reviewed, Refereed, Indexed Journal with IC Value : 86.87
**Volume - 1, Issue - 10, July - 2025**

DOIs: https://doi.org/10.63300/tm0110.25 --:-- Research Paper

# Women's virtues in Mu.Varadarasan's Akalvilakku novel

**Dr. B. Periyaswamy,**
Assistant Professor, Department of Tamil,
Dr. MGR Chockalingam Arts College,
Arni, Thiruvannmalai – 632317,
MAIL ID: periyaswamydeva@gmail.com
CELL : 9345315385,
https://orcid.org/0000-0002-7395-9699,

## Abstract
*This article extensively examined the Agalvilakku novel of Mu. Varadharasan, feminism, the risks of women in the house, the problems of male and female relationship, love, marriage and the status of women in the birthplace. It is known that feminism is to provide women what they need at the moment and can dissolve gender problems. The relationship between the husband and wife should be good. The character of Manimegalai explains that mostly men are able to lead the family and women are able to do so. We should also note that the privilege of being that is right. The Chandhiran and Imavathi relationship tells us that it is wrong to think that it is love because it is a male and female. The novel has illustrated about love and marriage. The article has been investigated as parents often consider their duty to be completed if parents marry a Marriage aged daughter.*

## Keywords
Novel, Mu. Varadarasan, Agalvillaku, Feminism, Home, Male - Female Relationship

# மு.வரதராசனின் அகல்விளக்கு புதினத்தில் மகளிர் மாண்புகள்

**முனைவர் பீ. பெரியசாமி,**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். சொக்கலிங்கம் கலைக் கல்லூரி,
ஆரணி, திருவண்ணாமலை- 632317,
மின்னஞ்சல்: periyaswamydeva@gmail.com
கைபேசி:9345315385,
https://orcid.org/0000-0002-7395-9699.

## ஆய்வுச்சுருக்கம்
*மு.வரதராசனின் அகல்விளக்கு எனும் நாவலின் வழி பெண்ணியம், இல்லறத்தில் பெண்கள் சந்திக்கும் இடர்கள், ஆண் பெண் உறவுநிலையில் ஏற்படும் சிக்கல்கள், காதல், திருமணம், பிறந்தவீட்டில் பெண்கள் நிலை ஆகியவற்றை இக்கட்டுரை விரிவாக ஆராய்ந்துள்ளது. இதன் வழி பெண்ணியம்*

*என்பது பெண்களுக்குத் தேவையானவற்றை தேவையான நேரத்தில் வழங்குவது என்றும் பாலின சிக்கல்களைக் கலையக்கூடியதென்பதும் அறியப்படுகிறது. இல்லறம் நல்லறமாக அமைய கணவன் மனைவியிடையேயான உறவு நன்றாக இருக்க வேண்டும். பெரும்பாலும் ஆண்கள் குடும்பத்தை வழி நடத்தக் கூடியவர்களாகவும் பெண்கள் அதைக்கேட்டு நடக்கக்கூடியவராகவும் இருக்கின்றனர் என்பதை மணிமேகலை கதாபாத்திரம் விளக்கியுள்ளது. அதுதான் சரி என்பதாக பாக்கியம் கதாபாத்திரம் மணிமேகலைக்கு அறிவுரை கூறுவதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆண் பெண் பழகினாலே அது காதல்தான் என்று நினைப்பது தவறு என்பதை சந்திரன் இமாவதியின் உறவு நமக்கு எடுத்துரைக்கின்றது. காதல் குறித்தும், திருமணம் குறித்தும் இந்நாவல் எடுத்துரைத்துள்ளது. பிறந்த வீட்டில் பெற்றோர்கள் பெரும்பாலும் பருவம் எய்திய மகளை ஒருவனுக்கு திருமணம் செய்து வைத்துவிட்டால் தன் கடமை முடிந்ததாகக் கருதுகின்றனர் போன்ற செய்திகள் இக்கட்டுரையின்வழி ஆராயப்பட்டுள்ளன.*

**முக்கியச்சொற்கள்**

நாவல், மு.வரதராசன், அகல்விளக்கு, பெண்ணியம், இல்லறம், ஆண்-பெண் உறவு

## முன்னுரை

மு.வரதராசனின் அகல்விளக்கு நாவலில் காணப்படும் மகளிர் மாண்புகளை எடுத்துரைக்கும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது. இது பெண்ணிய ஆய்வாகும். இக்கட்டுரையில் புதினம் என்பது காவியத்தின் தன்மை கொண்டது. கிளைக்கதைகளும் கதா பாத்திரங்களும் நிறைந்திருக்கும். பெண்ணியம் என்பது பெண்களின் தேவைகளை அறிந்து பூர்த்தி செய்வது. தாய்வீட்டில் பெண் பிள்ளைகள் நிலை. திருமணம் நடந்த பிறகு இல்லற வாழ்வில் அவர்கள் நிலை. இன்றைய சமூகச் சீர்கேட்டால் பெண்களுக்கு உண்டாகும் பாதிப்புகள். இயல்பான ஆண் பெண் நட்பில் இருக்கும் சிக்கல்கள். பெண்கள் சார்ந்த நம்பிக்கைகள், சடங்குகள், காதல் வாழ்வு, பெண்ணியப்புரட்சி, ஒழுக்கம் ஆகியவற்றை அகல்விளக்கு எனும் நாவல்வழி எடுத்துரைக்கிறது. மேலும், பாக்கியம் அம்மாளின் உயரிய பண்பு, தாய்மையுள்ளம் ஆகியவற்றை எடுத்துரைப்பதோடு அவர் தம்பி மனைவியினால் அனுபவித்த கொடுமைகளையும் எடுத்துரைக்கிறது.

## புதினம்

புதினம் என்பது காப்பியங்களைப்போல மிகநீண்டதொரு கதை வடிவம் எனலாம். அதன் சிறிய வடிவத்தை சிறுகதை எனலாம். புதினத்தில் பாத்திரப் படைப்புகள் அதிகமாக இருக்கும். கிளைக் கதைகள் இருக்கும். வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளும் இன்பத் துன்பங்களும் வாழ்வின் போராட்டங்களும் சமூகச் சீர்கேடுகளும் நிறைந்திருக்கும் சமகால சிக்கல்களின் ஆதாரமாகவும் விளங்கும். இதனை,

> **படைப்பாளியின் அல்லது படைப்பளிக்குத் தெரிந்த மனிதர்கள் மற்றும் சமூகத்தின் வாழ்க்கைக் கூறுகள் இல்லாமல் புதினம் உருவாகாது எனும் வகையில் மனித வாழ்க்கையுடன் மிக**

> **நெருங்கிய நேரடித் தொடர்பு கொண்டதே புதினம் எனலாம்.** (பெண்ணிய நோக்கில் மேலாண்மை பொன்னுச்சாமியின் புதினங்கள் ப. 31)

என்கிறார் புதுவை ஞானகுமாரன்.

## பெண்ணியம்

பெண்ணியம் என்பது பெண்களை அடிமைதளத்திலிருந்து விடுவித்து சுதந்திரமாய் செயல்பட வைப்பது. பெண் என்பவள் எவர்க்கும் எதற்க்கும் சலைத்தவள் அல்ல என்பதை எடுத்துரைப்பது.

> **பெண்ணியம் என்பதற்கு அல்லது பெண்விடுதலை என்பதற்கு என்னைப் பொறுத்தவரையில் என்ன விளக்கம் என்றால் ஒரு பெண் சுயமாகச் சிந்திக்கவும் சுயமாக வாழ்க்கையைத் தீர்மாணித்துக் கொள்ளவும் எந்தச் சார்புமின்றி இயங்கவுமான தகுதியை அடைவதுதான்.** (பெண்ணிய நோக்கில் பிரபஞ்சன் புதினங்கள், ப.131)

இன்றைய நிலையில் கூட நாம் இந்த இலக்கை எட்டவில்லை என்றுதான் சொல்ல வேண்டியுள்ளது. அதும்டுமன்றி பெண்ணியம் என்பதற்கு,

> **பெண்ணியம் அனைத்து வகைப் பெண்களுக்கும் உரிமை வேண்டுவது. பெண்கள் தாம் மேற்கொள்ளும் அனைத்துவகை வாழ்க்கை முறைகளிலும், பணிகள் அனைத்திலும் சம உரிமை உடையவர்களாக இருப்பதை வலியுறுத்துவது. பெண்களின் உரிமையைப் பறித்து அவர்களைக் கட்டுப்படுத்தும் அனைத்தையும் நீக்குதலை வேண்டுகிறது.** (பா. சிவசங்கர், ப.1173)

என்கிறார் பா.சிவசங்கர். இது இன்றளவும் முழுமையாக பெண்களுக்குக் கிடைக்கவில்லை என்பதே எதார்த்தமான உண்மை.

தினமும் செய்திதாள்களிலும் தொலைகாட்சிகளிலும் வெளிவரும் பெண்களுக்கு எதிரான பாலியல் சீண்டல்கள் வன்கொடுமைகள் வரதட்சணை கொடுமைகள் எல்லாம் பார்க்கும்போது பெண் சுதந்திரம் அல்லது பெண்களுக்கான பாதுகாப்பு என்ற நிலையில் நாம் இன்னும் தனிகவனம் செலுத்த வேண்டியதாகத்தான் உள்ளது. இதனை,

> **பெண்களும் ஆண்களை போலவே பல சிந்தனையும், உயர்வும், உணர்வும், விருப்பு, வெறுப்பு உடையவர்களாக உடையவர்கள்.** (க. சமயேஸ்வரி, ப.1481)

எனவே அவர்கள் தனித்தியங்க நாம் உறுதுணையாக இருக்க வேண்டும் என்பது இதிலிருந்து அறியமுடிகின்றது.

## பெண்ணடிமை

பாரதி மதில் உறுதி வேண்டும் எனும் பாடலில் பெண்மையைக் குறித்துக் கூறுகையில், **பெண் விடுதலை வேண்டும் (பாரதியார் கவிதைகள்,ப.212)** இதிலிருந்து பெண் அடிமைப்பட்டு கிடந்தால் என்பதை நம்மால் அறிய முடிகின்றது.மேலும், இதனை விவரிக்கும் குணசேகரன்,

> **பெண்ணடிமை என்பது சமூகத்தில் பெண்களின் இருப்பைக் (existence) குறிக்கும். பெண்விடுதலை என்பது வாழ்வின் நோக்கம். பெண் உரிமை என்பது விடுதலை அடைவதற்கான வழிமுறை. (தமிழ் நாவல்களில் குடும்பச் சிதைவுகள் ப.132)**

என்று கூறியுள்ளதிலிருந்து பெண் தன் அடிமை தளத்திலிருந்து வெளிவர அவள் அவளுடைய உரிமைகளையும் கடமைகளையும் உணர்ந்து செயல்பட வேண்டும் என்பது புலனாகின்றது.

## பிறந்த வீட்டில் பெண்கள்

ஒவ்வொரு வீட்டிலும் முதல் பெண் குழந்தை பிறந்ததும் மகாலட்சுமி பிறந்து விட்டாள் என்று கொண்டாடுவதையும் காண்கிறோம். அதே இரண்டாவதும் பெண் குழந்தை பிறந்தால் அட என்ன இது இவனுக்கு வாரிசே இல்லாமல் போய்விடும் போலிருக்கே எனப் பேச ஆரம்பித்துவிடுகிறார்கள். இதே அப்பெண் பருவமடைந்துவிட்டாள் போதும் சடங்குகள் செய்து தங்கள் வீட்டில் திருமண வயதில் பெண் இருக்கிறாள் என்பதை வெளிப்படுத்துகின்றனர். உரிய திருமண வயதில் பெண்களுக்கு திருமணம் செய்து விட்டாள் தான் நிம்மதி என மனப்பாண்மையும் பெருமளவில் உள்ளது. இதனை,

> **கல்வியும் பொருளாதாரத் தற்சார்பும் பெற்றிருந்தாலும் பெண் என்பவள் பிறந்த வீட்டைப் பொறுத்த வரையில் மற்றொருவனிடம் பொறுப்பு மாற்றம் செய்யப்பட வேண்டியதொடு சுமையாகவே கருதப்படுகிறாள். எனவே சம்பிரதாய மரபுக்கு முரண்படாமல் வரதட்சிணையைத் தந்து, திருமணம் என்ற பெயரில் அவளை எங்கேனும் தள்ளிவிட்டுத் தம் பொறுப்பைக் கழித்துக் கொள்ளவே பெண்ணின் பெற்றோர் விரும்புகின்றனர்.**
> (Revolution and the Status of Women in India Metropiolitan, P. 15)

எனும் சுசிலா மேத்தாவின் கருத்திலிருந்தும் அறியலாம்.

## இல்லறத்தில் பெண்கள்

குடும்பம் என்பது தாய்வழிச் சமூகத்திலிருந்து தந்தைவழிச் சமூகமாக மாறியது என்பது நாம்அனைவரும்அறிந்த ஒன்றே. இதனை,

> **சமூக வாழ்க்கையில் குடும்பம் இன்றியமையாத நிறுவனமாகக் காணப்படுகிறது. தந்தைவழிச் சமூகமாக உருமாறியப் பின்னர் பெண் குடும்ப அமைப்பிற்குள்செரிக்கப்பட்டத் தன்னிலையாக மாறினாள். ஆண் உரனுடைய வனாகவும் பெண் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய பண்புகளைப் பெற்றிருப்பவளாகவும் இருத்தலை வலியுறுத்தின**
> (ம.செந்தில்குமார், ப.14)

என்று ம.செந்தில்குமார் கூறியுள்ளார்.

இல்லறத்திற்கு இல்லாள் எவ்வளவு முக்கியம் என்பதை,

> **மனைவி இல்லையெனில் அது வீடு இல்லை. அதனால்தான் மனைவியை இல்லாள் எனக் குறிப்பிடுகின்றனர்** (ர. திவ்யபாரதி, ப.42)

என்பதன்வழிஅறியலாம்.

இல்லறத்தில் தாயாகவும், பாட்டியாகவும், தங்கையாகவும், மனைவியாகவும், மகளாகவும், மருமகளாகவும் இருக்கும் பெண்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருசூழலில் ஒவ்வொருவிதமான துன்பங்களைச் சந்திக்கின்றனர். அதிலும் மனைவி என்பவளின் நிலையோ சற்றுகூடுதல் என்றுதான் சொல்ல வேண்டும். அகல்விளக்கு நாவலில் மணிமேகலை தன் கணவன் தான் சொல்வதைத்தான்

கேட்டு நடக்க வேண்டும் என்று மிகவும் கண்டிப்புடன் இருப்பதாக பாக்கியம் அம்மாவிடம் சொல்கிறாள் அதற்கு அந்த அம்மா,

> **கோடு போட்டு வாழ்க்கை நடத்துவது நல்லாதுதானே அம்மா! போட்ட கோட்டில் நடப்பது எளிது அல்லவா? ஒரு காட்டில் நடக்க வேண்டுமானால் வழி இல்லாமல் நடந்து போவதுதான் துன்பம். கவலையே இல்லை ஒரு பாதையும் இல்லாத இடத்தில் இப்படி நடப்பதா அப்படி நடப்பதா வலக்கைப் பக்கம் திரும்பலாமா இடைக்கைப் பக்கம் திரும்பலாமா இந்தத் திசையா அந்தத் திசையா என்று நூறுமுறை தயங்கிப் போகவேண்டும் அப்போதும் மனக்குறை தீராது. அல்லலாக முடியும். ஒற்றையடிப்பாதை இருந்துவிட்டால் போதுமே கவலை இல்லாமல் போகலாமே (அகல்விளக்கு, ப. 295)**

என்று பாக்கியத்திற்கு அறிவுரை வழங்குகின்றாள். இதிலிருந்து நமக்கு என்ன செய்தி கிடைக்கிறது என்றால் பொதுவாக இல்லறத்தில் கணவன் சொல்படி கேட்டு நடந்தால் துன்பங்கள் இல்லை என்ற எண்ணம் அக்காலத்து பெண்களிடம் மலிந்து இருந்ததை அறியமுடிகிறது.

இவ்வாறு பாக்கியம் அம்மா கூறியதும் மணிமேகலை,

> **நீ சொல்வது நல்லதுதான் நம்முடைய முன்னோர் காலத்தில் அப்படித்தான் வாழ்க்கை நடத்தினார்கள். கவலையே இல்லாமல் இருந்தது. பெண்களுக்குக் குடும்பப் பண்பாடு என்று இருந்தது. ஆண்களுக்கு உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்று இருந்தது. இப்போது நம் நாட்டில் பலவகையரன நரகரிகம் வந்து கலந்துவிட்டன. பணம் ஏற்பட்டு வாழ்க்கையைப் பலவகையாகப் பிரித்துவிட்டது. யாரை யார் பின்பற்றுவது என்று தெரியவில்லை ஐம்பது ரூபாய் வருவாய் உள்ளவர் ஐந்நூறு ரூபாய் வருவாய் உள்ளவரைப் பின்பற்ற முடியுமா? அவர் ஐயாயிர ரூபாய் வருவாய் உள்ளவரைப் பின்பற்ற முடியுமா? எல்லோரும் ஓரே ஊரில் அடுத்தடுத்து வாழவேண்டியுள்ளது. போக்குவரவுக் கருவிகள் பலரைக் கொண்டுவந்து கலந்துவிட்டன. பத்திரிகை சினிமா முதலாகவை பல கருந்துகளைக் கொண்டுவந்து பலந்துவிட்டன. இப்போது குடும்பப்பண்பாடு என்று ஒன்று தனியே எப்படிக் கற்றுக் கொள்வது? உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்று சொன்னாலும் உலகில் எந்த வகையான மக்களைப் பார்த்து நடப்பது? முன்காலத்தில் நம் நாட்டு நாகரிகமே ஒரு கிராம அமைப்புப் போல் தெளிவாக எளிமையாக இருந்தது இப்போது நம் நாட்டு வாழ்க்கை ஒரு சந்தைபோல பெருங் கலப்பாக ஆவாரமாக ஆகிவிட்டது. ஆகையால் இப்போது உலகத்தாரைப்போல் நடப்பது என்றால் யாரைப் பார்த்து நடப்பது? கணவன் மனைவி என்ற இரண்டே பேர் தனிக்குடும்பம் நடத்துகிறவர்கள் இதோ நம்முடைய பெரிய குடும்பத்தைப் பார்த்துப் பின்பற்ற முடியுமா? கிராமத்துக் குடும்பம் நகரத்துக் குடும்பத்தைப் பார்த்துப் பின்பற்ற முடியுமா? நகரத்தில் பஸ் பயணத்துக்குக் காசு இல்லாதவர்கள் கார் வைத்து வாழ்பவர்களைப் பின்பற்றி முடியுமா? (அகல்விளக்கு, ப. 295-296)**

என்று கூறியதுடன் நம் வரவுக்கு ஏற்றபடி வாழ கற்றுக்கொள்வதுதான் சிறந்த வாழ்க்கையாக அமையமுடியும். மற்றவர்களின் வாழ்க்கையைப் பார்த்து நாம் வாழ ஆரம்பித்தால் நம்முடைய

வாழ்க்கைதான் மிகவும் சிக்கலில் போய் முடியும். அவரவர்களுக்கு எனத் தனித்தனி வருவாயும் தனித்தனிக்குடும்பச்சூழல்களும் உள்ளன. அதனை அறிந்து புத்திசாலிதனமாகவாழ்ந்தால்தான் நம் வாழ்வு சிறக்கும் என்பது அதிலிருந்து அறியப்படுகின்றது.

குடும்பம் எத்தகையது. ஏன் இந்த நிறுவனம் மனிதனுக்குத்தேவை என்பதை,

> **ஒரு கூரையால் பாதுகாக்கப்பட்ட இதயங்களின் இணைப்பு ஒரு குடும்பமாகும். அன்பு, பரிவு, பாதுகாப்புணர்வு, ஒன்றுபட்டு வாழ்வது, சகிப்புத் தன்மை ஆகியவற்றின் உறைவிடம் குடும்பம் (பெண்ணுரிமை சில பார்வைகள், ப.79)**

என்கிறார் மைதிலி சிவராமன். இதிலிருந்து நாம் அறிய வேண்டியது குடும்பமே ஒரு மனிதனின் பாதுகாப்பு கவசம் என்பதாகும். இதனை,

> **குடும்பம் அதன் உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. குடும்பத்தைச் சிதைப்பதென்பது அதிலுள்ள நல்ல அம்சங்களைக் கவனத்தில் கொள்ளவில்லை என்பதாகும் (அரசு - குடும்பம் – பெண்ணியம், ப. 92)**

என்கின்றனர். அனைவரிடமும் குற்றம்குறைகள் உண்டு. உலகத்தில் குற்றம் குறைகள் இல்லாத மனிதனே இல்லை எனலாம். அப்படியிருக்க தன் கணவனிடம் குறைகண்டவுடன் மனைவி அவனை வெறுத்து ஒதுக்குவதில் நியாயமில்லை. அதனை தன் அன்பால் தன் வயமாக்கி அவனோடு சேர்ந்து வாழ்வதே புத்திசாலிதனம். நெடுமாறன் மங்கையர்கரசி வாழ்க்கையிலும்,

> **கணவன் வேறே வழியாகச் சென்றபோதிலும் அவனோடு அன்பாக வாழவில்லையா? கடைசியில் கணவனைத் திருத்தும் முயற்சியில் வெற்றியும் பெறவில்லையா?** (அகல்விளக்கு, ப.357)

என்று பாக்கியம் அம்மாள் அறிவுரை கூறுவதாக அமைந்துள்ளதில் குடும்பத்தில் ஆண்பெண் உறவின் விட்டுக்கொடுத்தல் எவ்வளவு முக்கியம் என்பது தெரிகின்றது.

பெண்கள்தம் இல்லறவாழ்வில் விட்டுக் கொடுக்காவிட்டால் எந்நதமாதிரியான விளைவுகளை எல்லாம் சந்திக்க நேரிடும் அன்பும் நயமும் ஏன் தேவை என்பதை,

> **அவளும் பிடிவாதக்காரி நயமாகப் பேசவும் பழகவும் தெரியாதவள் ஆனால் உண்மையும் நேர்மையும் உள்ளவள். உண்மையும் நேர்மையும் மட்டும் இருந்தால் குடும்பத்துக்குப் போதுமா? அவற்றால் மனங்களைப் பிணைக்க முடியாது; அன்பும் நயமும்தான் மனங்களைச் சேர்க்கும் ஆற்றல் உள்ளவை கற்பகத்திடம் அந்தக் குறை உண்டு எதற்கும் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேசுவாள் நயமே இல்லை** (அகல்விளக்கு, ப. 358-359)

என்று கற்பகத்தின் குணத்தைக் குறித்து பாக்கியம்அம்மாள் கூறுவதிலிருந்து அறிய முடிகின்றது.

சந்திரனின் தகாத உறவால் அவள் மனைவி மாண்டதுடன், அந்த குடும்பமே சின்னாபின்னமாகிவிட்டது. அவள் மிகவும் நல்லவள். நல்ல பண்பும் அழகும் குணநலனும் உடையவள். அனுசரனையாக நடந்துக் கொள்ளக்கூடியவள். எதற்கும் எதிர்த்து பேச தெரியாதவள் அதனால் சந்திரன் அவளைபகடைக் காயாய் பயன்படுத்திக் கொண்டான். பல பெண்களுடன் உறவுக்கொண்டு அவர்களுக்குக் கொடுப்பதற்காக இவளிடம் இருந்த நகைநட்டுகளையெல்லாம்

வாங்கி கொண்டு போய் கொடுத்துவிட்டான். இதனால் பலநாளாக மனம் நொந்துப்போய் இருந்த சந்திரனின் மனைவி ஒருநாள்,

> **அவனைப் பழிக்கிற பழி எல்லாம் கேட்டு உருகிக் குன்றிப் போய்விட்டாள் அந்தப் பெண். முன்நாள் இரவு வந்தபோது, மனத்தில் இருந்ததை எல்லாம் சொல்லிக் கேட்காததை எல்லாம் கேட்டுவிட்டாள்.அவன் கோபத்தால் தடியும் தாம்பும் எடுத்து அடித்திருக்கிறான். மூக்குத்தி கேட்டிருக்கிறான். அதையும் கழற்றிக் கொடுத்து விட்டுப் பேசாமல் தோட்டத்துப் பக்கம் போனாள் காவல்காரன் இந்த நேரத்தில் எங்கே மா. தனியாகப் போகிறீர்களே என்று தடுத்துக் கேட்டானாம் தனியாகப் போகாமல், இதற்குக்கூட யார் துணை வருவார்கள் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள். வெளிக்குப் போகிறாள் என்று காவல்காரன் இருந்து விட்டானாம். நேரே தோப்புக் கிணற்றுக்குப் போய் இறங்கி விட்டாள். (அகல்விளக்கு, ப. 360)**

அவள் இறந்துப் போன செய்தி அறிந்து சந்திரன் அவளின் இறுதி காரியத்துக்குக்கூட வரவில்லை என வேலனின் தாய் சொல்வதிலிருந்து சரியான கணவன் அமையாத பல பெண்களின் நிலை குறித்து அறியமுடிகின்றது. இன்றளவும் குடிகார கணவனுக்கும் பொருளாசை பிடித்தவனுக்கும் பெண் பித்தர்களுக்கும் வாக்கப்படும் பெண்களின் நிலை இதுவாகத்தான் உள்ளது.

## சமூகச் சீர்கேடு

இச்சமூகத்தில் பெண் எப்படியாக இருக்க வேண்டும் என்று காலகாலமாக வரையறை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு வாழும் பெண்ணே சிறந்தவள் எனும் பார்வை இன்றவும் தொடர்ந்து கொண்டுதான்உள்ளது. இதனை,

> **சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட குணநலன்களோடு வளர்வதுமான் ஒரு பெண்ணுக்குப் பாதுகாப்பு; இல்லையென்றால் ஆபத்துதான் என்ற உணர்வு சமூகத்தில் பரப்பப்பட்டிருக்கிறது. அமைதி, உழைப்பு, பணிவு, நன்னடத்தை எல்லாவற்றிற்கும் மேலாகத் தன் முனைப்பு அற்ற தன்மை உடையவளாகப் பெண் விளங்க வேண்டும் என்று மட்டுமே சமூகம் எதிர்பார்க்கிறது.** (பெண் – மொழி – படைப்பு, ப. 29)

என்று பஞ்சாங்கம் கூறியுள்ளார். எனவே முதலில் இச்சமூகப் பார்வை கலையப்பட வேண்டும். பெண் என்பவள் சுதந்திரமானவள், அவளுக்கென தனிகுணநலன்களும் ஆசைகளும் விருப்பங்களும் வெறுப்புகளும் உள்ளன என்பதை இச்சமூகம் என்று அங்கிகரிக்க துணிகிறதோ அன்றுதான் பெண்களுக்கான விடியல் ஆரம்பமாகும்.

படிக்க செல்லும் பெண்கள் பாலியல் சீண்டலுக்கு உள்ளாவதை இன்று பல செய்திதாள்களிலும் தொலைகாட்சிகளும் நாம் பார்த்துக்கொண்டுதான் உள்ளோம்.எத்தனை சட்டங்கள் இயற்றப்படினும் அவைகளால் எவ்வித பயனும் ஏற்பட்டாக அறியமுடியவில்லை. மாறாக இலைமறை காய்மறையாக அங்கொன்றும் இங்கொண்றுமாக நடந்து வந்தவைகள் இன்று வெளிப்படையாக அதிகரித்து காணப்படுவதையே உணரமுடிகின்றது. இப்பாலியல் சீண்டல் எண்பதுகளிலிருந்தே இருந்துள்ளது. இதனை,

> **என் பக்கத்தில் முரடன் ஒருவன் நடந்து வந்தான். அவன் முன்னே போகட்டும் என்று நான் பின் தங்கினேன்.அவன் என்னை ஒரு கண்ணால் பார்த்தபடியே மெல்ல நடந்து ஓர் இடத்தில் நின்றான். நான் பரபரப்பாக நட்நது முன்னே சென்றேன். அவன் தொடர்ந்து என் பக்கத்தில் வந்தான். மறுபடியும் நின்றேன். அவன் முன்போலவே செய்தான். பஸ் நிற்கும் இடத்திற்கு நடந்தேன். அவனும் அங்கே வந்து உராய்வது போல் சென்றான். நான் ஒதுங்கியும் பயன் இல்லை. (அகல்விளக்கு, ப.182)**

என்று இமாவதி வேலனிடம் தான் பேருந்து பயணத்தில் எதிர்கொண்ட சிக்கலைக் கூறி அப்போது அந்த முரடனிடம் சண்டையிட்டு தன்னை சந்திரன் காப்பாற்றியதாகவும் அதிலிருந்துதான் தங்களுக்குள் நட்பு ஏற்பட்டதாகவும் கூறினாள். பொதுவாக இன்று செல்பி எடுப்பதிலேயே மோகம் கொண்டு தவறை சுட்டிக் காட்டவோ சிக்கலில்இருப்பவரை காப்பாற்றவோ நாம் துணிவதில்லை. என்று இச்சமூகம் தவறைற்றைக் கண்டு துணிந்து போராடுகிறதோ அன்றுதான் பெண்களுக்கு மட்டுமல்ல சமூகத்திற்கே விடிவுகிடைக்கும்.

அன்று நடந்ததை நினைத்த இமாவது,

> **இந்தப் பாவிகள் எல்லாரும் அக்கா தங்கையோடு பிறக்கவில்லையா? இவர்கள் தங்கள் குடும்பத்தில் பெண்களையே பார்த்ததில்லையா? என்ன நாடு இது! என்ன நாகரிகம் இது என்று வெறுப்போடு இருந்தேன். (அகல்விளக்கு, ப.183)**

என்று கூறுகிறாள். இதிலிருந்து ஓர் இளம்பெண்ணுக்கு ஓர் செய்த பாலியல் சீண்டலால் இந்த நாட்டின் மீதும் நாட்டின் நாகரிகத்தின் மீதும் வெறுப்பு உண்டாகிறது. இதுவே பிற்காலத்தில் அவர்கள் சக மனிதர்களோடு இயல்பாக பழக முடியாதவர்களாகவும் மனஇறுக்கத்திற்கு ஆளானவர்களாகவும் மாறுவதற்கு அடிப்படையாய் அமைந்துவிடுகிறது.

## ஆண் – பெண் உறவுச் சிக்கல்

இன்றைய சமூகச்சூழலில் காதல் திருமணங்கள் அதிகரித்துள்ளன. அதே நேரம் கலப்பு மணங்களும் அதிகரித்துள்ளன. கணவன் மனைவி இருவரும் வேலைக்குச் செல்லும் குடும்பங்களும் இன்றைக்கு பெருகி உள்ளன. சிறுபான்மையாகவே கணவன் மட்டும் வேலைக்குச் செல்லும் குடும்பங்களை நாம் காணமுடிகின்றது. இதனை,

> **பொது இடங்களில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பு உருவாகியதால் சாதி மதங்களைக் கடந்து பழகும் வாய்ப்பு உருவானது. அதன் விளையாக அங்கொன்றும் இங்கொன்றுமாகவேனும் காதல் மணங்கள் கலப்பு மணங்கள் நடைபெறும் சூழலும் உருவானது. பெண் திருமணமான பிறகு சம்பாதிக்க முடியாத சூழல் நிலவிய குடும்பங்களில் ஆண்கள் மட்டுமே சம்பாதிப்பவர்கள் அவர்கள் சொல்லுக்குக் கட்டுப்பட்டுப் பெண்கள் குடும்பம் நடத்த வேண்டும் என்பதான குடும்ப அமைப்பு ஏற்பட்டது (பெண்ணிய நோக்கில் மேலாண்மை பொன்னுச்சாமியின் புதினங்கள், ப. 49)**

என்று புதுவைஞானகுமாரன் கூறியுள்ளார்.

சந்திரனோடு நட்பாகப் பழகிய இமாவதி அவன் தன்னை காதலித்துள்ளான் என்றும் தன் திருமண அழைப்பிதழ் கண்டு மனமுடைந்து எங்கோ சென்றுவிட்டான் என்பதையும் வேலன் வாயிலாக அறிந்தபோது, ஆண்களோடு எப்படிப் பழகினாலும் ஆபத்துக்கு இடம் இருக்கும்போல் தெரிகிறது என்று கூறுகிறாள். இதற்கு வேலன், ஒரு பெண் திருமணம் ஆன பிறகு இப்படி பழகினால் இடர்பாடு இல்லை என்று கூறினான். ஆனால் இமாவதி அதனை மறுத்து, அப்போதும் உண்டு அந்தப் பெண்ணின் கணவன் அப்போது அவள்மேல் சந்தேகப்படுவான் என்று கூறுகிறாள். இதிலிருந்து ஆண் பெண் நட்பு என்பது சரியான புரிதலோடு இருக்க வேண்டும் இல்லையென்றாள் இருவர் வாழ்க்கையிலும் அந்த உறவானது மிகப்பெரிய பின்விளைவுகளை ஏற்படுத்திவிடும். நிம்மதியில்லாத வாழ்க்கைக்கு அது இட்டுச்செல்லும் என்பதை சந்திரன் இமாவதி நட்பு நமக்கு உணர்த்துகிறது. இதனை, **ஆண், பெண் உறவு என்பது ஒரு நாளில் உங்கள் உணர்ச்சியால் முடிவு செய்யக்கூடியது அல்ல. அது வாழ்க்கை முழுவதையுமே மாற்றக்கூடியாது. (அகல்விளக்கு, ப. 190)** என்பதன்வழி அறியலாம்.

நம் கலாச்சாரத்தில் எண்பதுகளில் திருமணப்பேச்சின்போது, பெண்களிடம் அவர்களின் ஒப்புதலை கேட்பது குறைவாகவே இருந்திருக்கும் போலத் தெரிகின்றது. எல்லாவற்றையும் வெளிப்படையாகப் பேசுபவர்கள் காதலைப் பற்றியோ திருமணத்தைப் பற்றியோ பேச்செடுத்தால் மட்டும் வெளிப்படையாகப் பேசுவதில்லை. இதனை,

> **நம் நாட்டு நாகரிகம்! எல்லாவற்றிலும் வெளிப்படையாகப் பழகிவிடுகிறோம். ஆனால் வாழ்க்கைக்கு அடிப்படையாகன காதலில் – திருமணப் பேச்சில் மட்டும் வெளிப்படையாகப் பேசி விளக்குவதில்லை. பெற்றோரும் மக்களிடம் அப்படி இருக்கிறார்கள்; மக்களும் பெற்றோரிடம் அப்படி இருக்கிறார்கள். அண்ணன் தங்கையும் அப்படி நடக்கிறார்கள்; நீங்களும் அப்படித்தான் (அகல்விளக்கு, ப.194)**

என்று சந்திரன் இமாவதியிடம் சொல்கிறான்.

அதற்கு இமாவது ஒரு பெண்ணாக என்னால் சொல்ல முடியவில்லை. ஓர் ஆணாக அவர் சொல்லியிருக்கலாமே என்கிறாள். அதற்கு வேலன் ஆண் பெண் இணைந்து பழகினால் காதல்வரை நீளுவது இயற்கை நீங்கள்தான் அவனுக்கு புரிய வைத்திருக்க வேண்டும் என்பதை, **ஆண் பெண் பழக்கம் என்றால் அது காதல் வரையில் நீளக்கூடியது. அதன்படி அவன் இயற்கையாக நடந்து கொண்டான். நீங்கள்தான் இந்தப் பழக்கம் அதுவரையில் செல்லக்கூடாது என்று கட்டுப்பாட்டோடு பழகினீர்கள். அந்தக் கட்டுப்பாட்டையாவது சொன்னீர்களா? (அகல்விளக்கு, ப.194)** என்று கேட்டுள்ளார். இதிலிருந்து ஆண்பெண் உறவு எதுவரை செல்ல வேண்டும் என்பதை இருவருமே மனதில் கொண்டு தெளிவாக முடிவெடுத்துப் பழக வேண்டும். அவ்வாறு பழகினால் சந்திரனின் வாழ்வில் ஏற்பட்டசோகம் மற்றவரின் வாழ்விலும்ஏற்படாமல் தடுக்கலாம்.

எவ்வளவுதான் கட்டுப்பாடாக இருந்தாலும் ஆண்பெண் உறவில் சிக்கல் வரத்தான் செய்யும் என்பதை வேலன்,

**இது எப்படி முடியும்? அழகான ரோசாக் பூவை ஒரு பெண்ணின் கையில் கொடுத்துவிட்டு அதை முகராமல் வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று சொன்னால் பயன்உண்டா? மணமுள்ள மாம்பழத்தை ஒரு சிறுவன் கையில் கொடுத்துவிடல் அதைத் தின்னாமல் வைத்திருக்க வேண்டும் என்று சொன்னால் பயன்உண்டா? முகராமலும் தின்னாமலும் வைத்திருக்கும் அளவிற்குப் பயத்தாலும் காவலாலும் செய்ய முடியும். ஆனால் அதனால் மனம் கெடும் (அகல்விளக்கு, ப.196)**

என்று கூறுவதிலிருந்து அறியலாம்.

ஆண்பெண் உறவில் சந்தேகம்தான் மிகப்பெரிய எதிரி. சந்தேகம் இல்லாத வாழ்க்கை சொறகத்தைப் போன்றது. அவ்வாறான துணை அமைவதுதான் இன்றைய காலக்கட்டத்தில் பெரிய கடினமானதாக உள்ளது. ஆண்களின் சந்தேக புத்தி குறித்து இமாவதி தன்னிடம் தன் உளநூல் ஆசிரியர் கூறியதாக,

**ஆண்கள் எவ்வளவுதான் முற்போக்காக இருந்தாலும் சந்தேகப்படுவார்கள். ஆகையால் அவர்களின் எதிரில் அண்ணன் தம்பியுடனும் எந்த ஆணுடனும் நெருங்கிப் பழகக் கூடாது. பழைய பழக்கங்களையும் சொல்லக்கூடாது என்று அறிவுரை கூறியிருக்கிறார் (அகல்விளக்கு, ப.219)**

என்று கூறினாள். இதற்கு வேலன்,

**பெண்கள் மட்டும் சந்தேகம் இல்லாதவர்களா? தன் கணவர் இன்னொரு பெண்ணுடன் வேறு எந்தக் காரணத்திற்காகப் பழகினாலும் மனைவிக்குச் சந்தேகம் ஏற்படாதா? (அகல்விளக்கு, ப.219)**

என்று இமாவதியிடம் கேட்டான். இதிலிருந்து ஆணுக்கு பெண் மீதும்பெண்ணுக்கு ஆண்மீதும் சந்தேகம் எழுவது இயற்கை ஆனால், அதனை வெளிக்காட்டாமல் உண்மை அறிந்து பேசி பழகுவதே அறிவு என்பதும் இதுவே உறவு நீடிக்க உன்னதமான வழியாகும் என்பதும் அறியப்படுகிறது.

இமாவதியிடம் ஏற்பட்ட காதல் தோல்வியால் விடுதியிலிருந்து வெளியேறிய சந்திரன். நீலகிரிக்குச் சென்று அங்கு,

**தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்பவள் ஒருத்தியாம் முப்பது வயது இருக்குமாம். குழந்தை ஒன்றும் இல்லையாம். அவளோடு அன்பாக வாழ்க்கை நடத்துகிறானாம். (அகல்விளக்கு, ப.235)**

என்ற செய்தி கல்லூரி பழைய மாணவன் சாந்தலிங்கம் வேலுவிடம் கூறினார். ஒரு காதல் முறிவு ஒரு மனிதனின் மனதை தன்னைவிட வயதில் மூத்த அதிலும் ஏற்கனவே திருமணமான இரண்டு குழந்தைக்கு தாயானவளிடம் செல்ல துணிவு ஏற்படுத்தியிருக்கிறதே. இதுதான் பலர் வாழ்க்கை தடம்மாறிப் போவதற்கான அறிகுறியாக அமைந்துவிடுகிறது. அவன்தான் இளையவன் அந்த பெண் ஆவது எடுத்துச்சொல்லியிருக்கலாம். இப்பேறப்பட்ட பெண்களால்தான் நல்ல குடும்ப பெண்களுக்கும் அவப்பெயர் ஏற்பட்டுவிடுகிறது.

சந்திரனை தேடிச்சென்ற வேலன் அங்கிருந்த தேநீர் கடைக்காரனிடம் விசாரித்தபோது சில அங்க அடையாளங்களைச் சொன்னான். அதைவைத்து,

> **அந்த அம்மா நெருங்கி வந்தபோது கவனித்தேன். கட்டான முரட்டு உடலோடு தேநீர்க் கடையில் இருந்தவன் சொன்ன பொருத்தங்களோடு இருந்ததைக் கவனித்தேன். இப்படிப் பட்டவளை நாடும் அளவிற்குச் சந்திரனுடைய மனம் கெட்டுவிட்டதே என்று வருந்தினேன் (அகல்விளக்கு, ப.248)**

என்று சந்திரனின் நிலை கண்டு வருந்திய வேலன் கூறுவதில் அவனுடைய உண்மையான நட்பும் நண்பனின் வாழ்வின்மீது கொண்ட அக்கறையும் வெளிப்படுகின்றது. அதுமட்டுமன்றி அவளைக் கண்ட வேலன் தன் நண்பன் அவளிடம் எப்படி சிக்கியிருப்பான் என்பதை,

> **கொடியவர்கள் பொல்லாதவர்கள் என்று பழிக்கப்படுவோரும் இருபத்து நான்கு மணி நேரமும் கொடுமையோடு இருப்பதில்லை; இருக்க முடியாது என்பது மனித இயற்கை அவர்களின் உள்ளத்திலும் ஈரம் உண்டு; குழைவு உண்டு இப்படிக் குழைந்த நெஞ்சோடு அவள் பழகிய நேரத்தில் சந்திரன் தன் உள்ளத்தைப் பறிகொடுத்திருப்பான் என்று எண்ணினேன் (அகல்விளக்கு, ப.249)**

என்று கூறுகிறான். இதனால்தான் அவரவர் பார்க்கும் பார்வையில்தான் எவரிடமும் அழகும், கவர்ச்சியும், அன்பும் உள்ளது என்பதை அறிய முடிகின்றது. மணிமேகலை, பாக்கியம் அம்மாள், கயற்கண்ணி போன்ற குணமான பெண்கள் வாழும் இந்த உலகத்தில்தான் இவள் போன்ற பெண்களும் வாழ்கின்றனர் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

### சடங்குகள்

சடங்குகள் என்பது காலகாலமாக நம் சமூகத்தில் இரண்டற கலந்துவிட்டதொன்று. அது செய்வதே கௌரவம் என்றும் குடும்பத்தின் நன்மை என்றும் கருதுபவர்கள் இன்றளவும் இருந்துதான் வருகின்றார்கள். ஒருவனின் பிறப்பு முதல் இறப்பு வரை இச்சடங்குகள் தொடர்ந்துக் கொண்டே உள்ளன. இவ்வாறான சடங்குகளால் மக்கள் தங்கள் செல்வத்தில் பெரும்பாலானதை செலவழிக்கின்றனர். இதனை,

> **நமது நாட்டில் நடைபெறும் அர்த்தமற்ற சடங்குகளுக்கோர் எல்லையே கிடையாது. ஏதேனுமொரு காரியத்தைச் செய்ய ஆரம்பிக்கும்போதும். அக்காரியங்களை முடிவு செய்யும்போதும் பைத்தாயக்கார விதமாக ஏதேதோ சடங்குகள் செய்து வருகிறார்கள். இச்சடங்குகள் எதற்காகச் செய்கிறோம் இதனால் என்ன பலன் உண்டு என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. கேட்டால் "ஏதோ முன்னோர் செய்தது அதை ஏன் நாம் விடவேண்டும்?" என்று கூறுவார்கள் எத்தனை கஷ்டப்பட்டாலும் கடன்பட்டாவது பயித்தியக்கார விதமான இச்சடங்குகளை நம்நாட்டு மக்கள் செய்யாமல் விடுவதில்லை.** (பெண் விடுதலையும் பெண்ணுரிமையும், ப. 36)

என்று இரா. பிரேமா கூறுதிலிருந்து அறியலாம்.

திருமணத்தின்போது நடத்தப்படும் பல்வேறு சடங்குகளில் ஒன்றான நலுங்கு வைக்கும் சடங்கு பற்றி அகல்விளக்கு நாவலில் மணிமேகலைக்கு நலுங்கு வைக்கும்போது,

**மணப்பெண்ணுக்கு நலுங்கு வைக்கப் பெண்கள் ஒவ்வொருவராக வந்து சந்தனம் பூசி ஆரத்தி சுற்றிச் சென்றார்கள். ஒருவர் வடக்குப் பக்கத்தே உட்கார்ந்து நலுங்கு வைத்த பெண்களுக்கு வெற்றிலை பாக்கு எடுத்துக்கொடத்துக் கொண்டிருந்தார். இளம் பெண்கள் இருவர் சேர்ந்து பாட்டுப் பாடினார்கள் பாட்டும் நாதசுர இசையும் மாறி மாறி அமைந்து கேட்பதற்கு இனிமையாக இருந்தது. ...... அம்மா சந்தனத்தை எடுத்து மணப்பெண்ணின் முகத்திலும் கைகளிலும் தடவிவிட்டுஆரத்தி சுற்றித்தொடங்கியபோது, "போதும் அம்மா! ஒன்பது பேர் ஆகிவிட்டது. நீங்களே கர்ப்பூரம் ஏற்றிச் சுற்றி விடுங்கள், போதும்" என்றார் ஒருவர். (அகல்விளக்கு, ப. 204)**

என்பதிலிருந்து அச்சடங்கு குறித்து நம்மால் அறிந்துகொள்ள முடிகின்றது.

திருமணத்திற்குப் பிறகு மரு வருதல் குறித்து, திருமணம் முடிந்ததும் **மணமகனும் மணமகளும் ஒரு முறை எங்கள் வீட்டுக்கு வந்து பாலும் பழமும் உண்டார்கள். பிறகு மறுநாள் மாலையில் பெண்வீட்டு மருவுக்குச் சென்றார்கள் (அகல்விளக்கு, ப.208)** என்பதிலிருந்து முதலில் மணமகன் வீட்டுக்கு வருவார்கள் என்பதும் அடுத்ததாக மணமகள் வீட்டுக்குச் செல்வார்கள் என்பதும் அறிய முடிகின்றது.

## நம்பிக்கைகள்

மனிதன் கடவுள்மீது நம்பிக்கை, சகுனங்கள்மீது நம்பிக்கை, சடங்குகள் மீது நம்பிக்கை, நிமித்தங்கள் மீது நம்பிக்கை என்று தம் வாழ்நாளின் பெரும்பகுதியை நம்பிக்கையோடே வாழ்ந்துவிடுகிறான். அகல்விளக்கு நாவலில் கணவனை இழந்தை பெண்கள் பொட்டு வைக்கக்கூடாது என்ற நம்பிக்கை நிலவுவதை,

**நான் அம்மாவின் நெற்றியிலிருக்கும் குங்குமத்தை எடுத்துப் பாக்கியத்தின்நெற்றியில் இடுவேனாம். பாக்கியம் தடுத்துத் தடுத்துக் கண்ணீர் விடுவாராம், 'வேண்டா கண்ணு! நான் இடக்கூடாது கண்ணு!' என்று அழுவாராம். "அக்கா மூஞ்சிக்குத்தான் குங்குமம் நல்லா இருக்கும்" என்று நான் பிடிவாதம் செய்வேனாம் (அகல்விளக்கு, ப.48)**

என்று வேலன் தன் தாயிடம் கூறியதாகக் கூறப்பட்டுள்ளது. அப்போது கணவனை சிறுவயதிலேயே இழந்த பாக்கியம் அம்மா,

**கண்ணே! உணக்கு இருக்கிற அவ்வளவு கருணை கடவுளுக்கு இல்லையே!** (அகல்விளக்கு, ப. 49)

என்று கூறும் காட்சி படிப்பவரின்மனதை பதைபதைக்க வைக்கிறது. இது நம்பிக்கைக்கு எதிரான மனநிலை இன்றைய தலைமுறையிடம் ஏற்பட வேண்டும் என்பதற்கான அடிப்படையாகக்கூடநாம் இதனை எடுத்துக்கொள்ளலாம்.

துணை இழந்த ஆண்களுக்கு சமூகத்தில் இவ்வாறான எந்த நடைமுறையையும் கடைபிடிப்பதில்லை. இதனை வன்மையாகச் சாடும் சிவசங்கரி, **விதவை என்கின்ற சொல்லையே எதிர்ப்பவள் நான். மனைவியை இழந்த கணவனை விதவன் என்று சொல்லாதபோது கணவனை இழந்த மனைவியை மட்டு விதவை என்று ஏன் குறிப்பிட வேண்டும் (சிவசங்கரி நாவல்களில் பெண்கள், ப.14)** என்று சமூகத்தைப்பார்த்து கேள்வி எழுப்புகிறார். இதனை தான் நாம் ஆணாதிக்கச் சமூகம் என்கிறோம். இக்கட்டுப்பாடுகளிலில் இருந்துதான் பெண்கள் வெளிவர வேண்டும் என்றும் குறிப்பிடுகிறோம்.

காற்று கருப்பு குறித்த நம்பிக்கையும் மக்கள் மனிதரிடையே இருந்துள்ளது. அதிலும் அது பெண்களுக்குதான் தீங்குசெய்யும் என்பதும் நம்பிக்கையாய் இருந்துள்ளது. வேலனும் சந்திரனும் தங்கள் விடுமுறைநாளில் பொழுதைக் கழிக்க வேலத்திலிருந்த ஒரு மலைஅடிவாரத்திற்குப் போனார்கள். அப்போது கற்பகமும் வருவதாகக் கூறினாள். அதற்கு அவளின் அம்மா, **அறியாத பெண் நீ அங்கெல்லாம் போகக்கூடாது. ஏதாவது காற்று இது அது இருக்கும் இடம் அவர்கள் ஆண்பிள்ளைகள் போய் வரலாம். நீ போகக் கூடாது என்று சொல்லி இவளைத் தடுத்து விட்டார்கள்** (அகல்விளக்கு, ப. 76) என்பதிலிருந்து அறியாத பெண்களைக் காற்று பிடித்துவிடும் என்ற நம்பிக்கை இருந்ததை அறியலாம்.

குடும்பத்தில் நல்லகாரியங்கள் செய்யும்போது கணவன் மனைவியாகவும் குழந்தைகளுடன் வாழ்பவர்களே முன்னிருந்து நடத்த வேண்டும் என்ற நம்பிக்கை இன்றளவும் உள்ளது. இதனை பாக்கியம் அம்மாவின் தம்பி திருமண வேலைகளில் அம்மா ஈடுபட்டு வருவதாக மணிமேகலை கூறுகிறாள். அதற்கு வேலன் காரணம் வினவ, **அந்த வீட்டிலும் வந்த உறவினரிலும் வாழ்வரசியாக யாரும் இல்லாத காரணத்தால், அம்மாவின் உதவி அவர்களுக்குத் தேவையாக இருந்தது. (அகல்விளக்கு,** ப. 201) என்று கூறினாள்.

### காதல்

தன்னுடைய நண்பன் சந்திரன் இமாவதி நட்பாகப் பழகியதை சரியாகப் புரிந்துக் கொள்ளாமல் இப்படி ஒரு முடிவு எடுத்து விடுதி விட்டேசென்று விட்டானே. சிறந்த அறிவு படைத்தஅவனுக்கு ஒரு பெண் தன்மீது கொண்ட நட்பு எப்படி காதலாகத் தெரிந்ததோ தெரியவில்லையே என வருந்திய வேலன்.

> **ஆண் ஒருவன் மிகுந்த அன்பு செலுத்தினால் அது நட்புத்தானே? அப்படிப்பட்ட அன்பை ஒரு பெண்ணும் ஒருவனிடம் செலுத்த முடியாதா? அதுவும் நட்புத்தானே? ஆணுக்கும் பெண்ணுக்கும் மனத்தில் அன்பு நட்பு எல்லாம் உண்டு அல்லவா? பெண் அன்பு செலுத்தினால் அதை ஏன் ஆண்கள் காதல் என்று எடுத்துக் கொள்ளவேண்டும் என்னிடம் என் தங்கை அன்பு செலுத்துவதுபோல் ஒரு பெண் உடம்பின் எண்ணம் இல்லாத அன்பைச் செலுத்த முடியாதா? இவ்வளவு கூர்மையான அறிவு உள்ள சந்திரன் இதை உணராமல் அலைகின்றானே! இவனுடைய அறிவையும் கண்டு அந்தப் பெண் அன்பு கொண்டிருப்பாள்! அந்த அன்பை உடம்பின் எண்ணம் இல்லாமல் நட்பாக வளர்த்திருப்பாள்! அவளால் முடிந்தது; இவனால் முடியவில்லை. காதல் என்று கோட்டை கட்டிவிட்டான். இன்று கலங்கி நிற்கிறான் என்று பலப்பல எண்ணினேன். (அகல்விளக்கு, பக். 164 – 165)**

என்று கூறுகின்றான். ஆண் பெண் சேர்ந்து பழகினால்அது காதல்தான் என்றுதம்பட்டம் அடிக்கும் சமூகத்திற்கான ஒரு சம்மட்டி அடியாகத்தான்இதை நாம் பார்க்க வேண்டும்.

காதலித்து திருமணம் செய்து கொள்பவர்கள் வாழ்க்கை எப்படி என்பதனை, **காதல் ஒருவகை ஆசை அது வெறிபோல் வளரும்போது குற்றங்களே தெரிவதில்லை. அது தணியும்போது மற்றக் குடும்பங்களின் நிலை வந்து விடுகிறது. அப்போது பண்புகள் இருந்தால்தான் வாழமுடியும்**

**இல்லையானால் வாழ்வு இல்லை** (அகல்விளக்கு, ப. 299) என்கிறார் மு.வ. அதாவது காதலர்களாய் இருக்கும்வரை குற்றங்கள் தெரிவதில்லை. அந்த காதல் குறையும் போது குடும்பத்தில் சச்சரவுகள் ஏற்படும்அப்போது ஒருவரை ஒருவர் புரிந்து நடந்துக் கொண்டால் இல்லறம் நல்லறமாகும். இல்லையென்றால் இருவருக்குமான வாழ்வு வேதனையில்தான் முடியும் என்பதை இதன்வழி அறியலாம்.

## ஒழுக்கம்

குடும்பத்தில் ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி தவறுகள் செய்வது இயற்கை. அப்போது, அவர்களின் தவற்றைச் சுட்டிக்காட்டி நல்வழிப்படுத்தி அவர்களோடு ஒன்றி வாழ்வதுதான் சிறறந்த வாழ்க்கைத் துணையின் கடன். அதைவிட்டு அதைக் கொண்டு அவர்களின் நடத்தையையும் அவரையும் இழிவுபடுத்தி தன் வாழ்விலிருந்து விலக்கி வைத்துவிட்டால் பின் வாழ்வேது. இதனை,

> **படித்துவிட்டு வேலைக்குப்போகும் பெண்களைச் சொல்கிறாய், அவர்கள் மணலில் நடப்பவர்கள் அல்ல. சேற்றில் நடப்பவர்கள். ஆகவே வழுக்கி விழுந்தால் மன்னிக்க வேண்டும். ஒரு முறை அனுபவப்பட்டு அறிவு பெற்ற பிறகாவது திருந்த வேண்டும். வெளியே பழகும் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் ஊன்றுகோல் இல்லாமல் நடக்கக்கூடாது. புலனடக்கம் கட்டாயம் வேண்டும். திருமணம் ஆகாத பெண்களுக்கும், என்னைப்போல் கைம்பெண்களுக்கும் ஊன்றுகோல் இருந்தாலும் போதாது. எங்கள் வாழ்க்கை மலைச்சரிவில் பெருங்காற்றில் நடப்பது போன்றது. நாங்கள் நிமிர்ந்து கைவீசி நடக்க ஆசைப்படவே கூடாது. மண்ணோடு மண்ணாய் ஒட்டிப் பற்றிக் கொண்டு நடக்க வேண்டும். இல்லையானால் பெருங்காற்றில் கால் தவறினால் புரண்டு விழுந்து அழிய வேண்டியதுதான்** (அகல்விளக்கு, ப.312)

என்பதிலிருந்து பெண்களும் வழித்தவறி நடவாமல், தன் கணவனின் கௌரவத்தைக் காக்கும்படி தூயவளாக வாழவேண்டும். இல்லையென்றால் வாழ்க்கை சீரழிந்துவிடும் என்ற எச்சரிக்கை மணியாக இதனை பாக்கியம் அம்மாள் கூறுகிறார்.

## பெண்ணிய புரட்சி

பொதுவாக பெண் என்றாலே பருவம் அடைந்தவுடன் ஏதாவது நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்து அவளுக்குச் செய்ய வேண்டியதை செய்துவிடவேண்டும் என்ற எண்ணம்தான் இன்றளவும்பெற்றோர்களிடம் காணப்படுகின்றது. ஆனால், நல்ல கணவன் கிடைக்கும்வரை திருமணம் செய்யக்கூடாது என்பதை, **பெண்ணாய்ப் பிறந்தவர்கள் எல்லோரும் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று பெற்றோர்கள் வற்புறுத்தக் கூடாது. தக்க கணவர் கிடைக்காத பெண்கள் திருமணம் ஆகாமலே இருக்கட்டும் என்று விட்டுவிட வேண்டும். (அகல்விளக்கு,** ப. 356)என்கிறார் மு.வ.

## பண்பு நிறைந்த பாக்கியம்

ஒருநாள் பாக்கியத்தின் தந்தை மாரடைப்பால் இறந்துவிட்டார். அதன் பிறகு அவரின் வாழ்க்கையின் நிலை மாற்றம் கண்டு போனது. ஒருமுறை வேலன் கல்லூரியிலிருந்து வீட்டுக்கு வந்தபோது பாக்கியம் அம்மாவைப் பார்த்தான் அப்போது அந்த அம்மா,

> **என்ன செய்வது தம்பி! கழுத்தில் இருந்த ஒரு சங்கிலியும் வேண்டும் என்று தம்பி ஆசைப்பட்டான். அப்பா செய்து போட்டது. தனக்கு வேண்டும் என்று கேட்டான் கொடுத்துவிட்டேன். கொடுத்திருக்கக் கூடாது என்று நம் அம்மா கண்டித்தார்கள்.போகட்டும் என்று கொடுத்து விட்டேன் இனிமேல் என் சொத்து அன்பும் அறிவும் தான். (அகல்விளக்கு, ப.272)**

என்று சொன்னாள் இதிலிருந்து பெண்களுக்கு கல்வியும், தன்னம்பிக்கையும் எவ்வளவு முக்கியம் என்பதை ஆசிரியர் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். மேலும், உழைக்கும் எண்ணமும் தொண்டுள்ளமும் இருந்தால் எப்படியும் வாழலாம் என்பதை அந்த அம்மையாரின் வாழ்க்கை நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

## தாய்மை

நமது சமூகத்தில் பெண் ஆனவள் தாய்மையின் அடையாளமாகவும் பொறுமையின் சிகரமாகவும் பார்க்கப்படுகிறாள். ஒரு பெண் முழுமையடைவது தாய்மையில்தான். இதனை, **பெண்கள் முழுமையடைவது தாய்மையில்தான். உயிர்களைப் பெற்று அன்போடு உருவாக்கும் மகளிர் பணி மேன்மையானதாகும்** (சங்கீதா, ப.209) என்பதிலிருந்து அறியலாம்.

பெண் குடும்பத்தின் மூலாதாரமாகத் திகழ்கிறாள். அவளே குடும்பத்தின் மகிழ்ச்சிக்கு வித்தாகிறாள். இதனை, **இந்தியச் சமூகத்தில் பெண் என்பவள் “தாய்” (அ) மனைவி என்ற நிலையில் தான் பெரும்பாலும் அடையாளப்படுத்தப்படுகிறாள். எனவே குடும்பம் என்ற நிறுவனத்திலிருந்து பிரித்தறிய முடியாத ஒரு நிலையில் தான் அவளது வாழ்க்கை வடிவமைக்கப்பட்டுள்ளது. (பெண் – மொழி – படைப்பு, ப. 12)** என்கிறார் க. பஞ்சாங்கம். சிறுவயதிலேயே கணவனை இழந்த பாக்கியம் அம்மாள் வேலனையும் மணிமேகலையையும் தம் குழந்தையைப் போல நேசித்தாள். இதனை, **பாக்கியம் குழந்தை பெற்றுத் தாயாக விளங்காவிட்டாலும் தாய்மையுள்ளம் நிறைந்த அம்மையார். அதனால் என்னையும் என் தங்கை மணிமேகலையையும் மற்றொரு தாய்போல் இருந்து வளர்த்து அன்பு காட்டினார். (அகல்விளக்கு, ப. 47)** என வேலன் கூறுவதிலிருந்து நாம் அறிய முடிகின்றது.

## தம்பி மனைவி கொடுமை

பாக்கியம் அம்மா, மிகவும் நல்லவர் அவரின் தம்பிக்கு திருமணம் செய்து வைத்தப்பின் அவனது மனைவி இவரை மிகவும் கொடுமைப்படுத்துகிறாள். இதனை வேலனின் அம்மா, **என்ன செய்வது? காலமே இப்படித்தான் மாறி வருகிறது. பாக்கியம் நல்ல பெண்! இருக்கும் இடம் தெரியாமல் அடங்கி ஒடுங்கி வேலை செய்கிறாள். அவளுக்கு வேறு ஒரு திக்கும் இல்லை. அவளுடைய ஒரு வயிற்றுச் சோறுக்காக நேற்று வந்த ஒரு பெண்ணிடம் சிறுமைப்படுகிறாள் என்று அம்மா சொன்ன போது என் உள்ளம் உருகியது. (அகல்விளக்கு, பக். 225-226)** என்று கூறினார். வேலன் பாக்கியம் அம்மாவின் நிலை கண்டு வருந்தினான். இது, இன்றைய காலக்கட்டத்தில் எல்லா இடங்களிலும் நடக்கக்

கூடியதாகவே இருக்கிறது. அதனாலேயே பெரும்பாலான வீடுகளில் பெண் பிள்ளைகளுக்கு திருமணம் செய்துவைத்தப்பின் ஆண்களுக்கு திருமணம் செய்கின்றனர்.

## முடிவுரை

வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளும் இன்பத் துன்பங்களும் வாழ்வின் போராட்டங்களும் சமூகச் சீர்கேடுகளும் நிறைந்திருக்கும் சமகால சிக்கல்களின் ஆதாரமாக விளங்குவன நாவல்கள். சந்திரனின் மனைவியின் துயரநிலை இன்றைய குடிகார கணவனுக்கும் பொருளாசை பிடித்தவனுக்கும் பெண் பித்தர்களுக்கும் வாக்கப்படும் பெண்களின் நிலை நிலையாகத்தான் உள்ளது. ஓர் இளம்பெண்ணுக்கு ஒருவன் செய்த பாலியல் சீண்டலால் இந்த நாட்டின் மீதும் நாட்டின் நாகரிகத்தின் மீதும் வெறுப்பு உண்டாகிறது என்பதையும் ஆண் பெண் நட்பு என்பது சரியான புரிதலோடு இருக்க வேண்டும் இல்லையென்றாள் இருவர் வாழ்க்கையிலும் அந்த உறவானது மிகப்பெரிய பின்விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்பதையும் இமாவதி கதாபாத்திரம் வாயிலாக அறியமுடிகின்றது. பெண் என்பவள் சுதந்திரமானவள், அவளுக்கென தனிகுணநலன்களும் ஆசைகளும் விருப்பங்களும் வெறுப்புகளும் உள்ளன என்பதை இச்சமூகம் என்று அங்கிகரிக்க துணிகிறதோ அன்றுதான் பெண்களுக்கான விடியல் ஆரம்பமாளகும்.

## அடிக்குறிப்புகள்


1. கனகவல்லி, வை. *பெண்ணிய நோக்கில் பிரபஞ்சன் புதினங்கள்.* இளமுனைவர்ப்பட்ட ஆய்வேடு, தமிழ்த்துறை, காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம், புதுவை, 1995.
2. குணசேகரன், அ. *தமிழ் நாவல்களில் குடும்பச் சிதைவுகள்.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2006.
3. சங்கீதா. “ஆண்டாள் பிரியதர்ஷினி நாவல்களில் பெண்ணியம்.” *சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்*, மலர் 2, இதழ் 3, ஜனவரி 2018, ISSN: 2454-3993.
4. சமயேஸ்வரி, க. “எஸ்.ராமகிருஷ்ணனின் துயில் புதினத்தில் பெண்ணிய சிந்தனைகள்.” *International Journal of Novel Research and Development*, Vol.7, Iss.8, August 2022, ISSN:24564184.
5. சிவசங்கர், பா. “பெண்ணுரிமை மீட்டலில் வாஸந்தியின் புதினங்கள்.” *புதிய அவையம்*, Vol.7, Iss.02,June 2023, ISSN:2456-821X.
6. சுசிலா மேத்தா. *ரெவலூாசன் அன்ட் த ஸ்டேடஸ் ஆப் வுமன் இன் இந்தியா.* மெட்ரோபியோலிட்டன், நியூதில்லி, 1988,
7. சுப்பிரமணிய பாரதி, சி. *பாரதியார் கவிதைகள்.* பாரதி பதிப்பகம், சென்னை, 2009.
8. செந்தில்குமார், ம. “அளம் நாவலில் பெண்மையச் சித்தரிப்பு.” *பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்,* Vol.2, Iss.2, November 2022, ISSN:2583715X, DOI:10.5281/zenodo.7810232.
9. சௌரிராஜன், செ. *சிவசங்கரி நாவல்களில் பெண்கள்.* காவ்யா, சென்னை,1997.

10. திவ்யபாரதி, ர. “அறஇலக்கியத்தில் இல்லற மதிப்புகள்.” *பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்,* Vol.3, Iss.1, May 2023, ISSN:2583715X, DOI:10.5281/zenodo.7997879.
11. பஞ்சாங்கம், க. *பெண் – மொழி – படைப்பு.* காவ்யா, சென்னை, 2007.
12. பிரேமா, இரா. *பெண் விடுதலையும் பெண்ணுரிமையும்.* அறிவுப் பதிப்பகம், சென்னை, 2008.
13. புதுவை ஞானகுமாரன். *பெண்ணிய நோக்கில் மேலாண்மை பொன்னுச்சாமியின் புதினங்கள்.* சிந்தனை பதிப்பகம், புதுச்சேரி, 2007.
14. மார்க்ஸ், ரவிக்குமார், வேலுச்சாமி (பதி.). *அரசு – குடும்பம் – பெண்ணியம்.* விடியல் பதிப்பகம், கோவை, 1994.
15. மைதிலி சிவராமன். *பெண்ணுரிமை சில பார்வைகள்.* தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1995.
16. வரதராசன், மு. *அகல்விளக்கு.* பாரி நிலையம், சென்னை, 1995.


## References


1. Kanagavalli, Vai. *PenniyaNokkil Prapanjan Puthinangal*. M.Phil Thesis, Department of Tamil, Kanji Mamunivar Patta Merpadipu Maiyam, Pudhuvai, 1995.
2. Gunasekaran, A. *Tamil Novelkalil Kudumba Sithaivugal.* Newcentury Book House, Chennai, 2006.
3. Sangeetha. “Andal Priyatharshini Novalkalil Penniyam.” *Shanlax international tamil research journal*, Vol.2, Issue.3, January 2018, ISSN: 2454-3993.
4. Samayeshwari, Ka. “S.Rmakrishnanin Thuyil Puthinathil Penniya Sinthanaigal.” *International Journal of Novel Research and Development*, Vol.7, Iss.8, August 2022, ISSN:24564184.
5. Sivasankar, Pa. “Pennuraimai Meetalil Vasanthiyin Puthinangal.” *Puthiya Avaiyam*, Vol.7, Iss.02,June 2023, ISSN:2456-821X.
6. Sushila Metha. *Revolution and the Status of Women in India.* Metropiolitan, New Delhi, 1988.
7. Subramaniya Bharathi, S. *Bharathiyar Kavithaigal.* Bharathi Pathipagam, Chennai, 2009.
8. Senthilkumar, Ma. “Alam Novalil Penmaiya Sitharippu.” *Pandian Journal of Womens Studies*, Vol.2, Iss.2, November 2022, ISSN:2583715X, DOI:10.5281/zenodo.7810232.
9. Sowrirajan, S. *Sivasankari Navakalil Pengal.* Kaviya, Chennai, 1997.
10. Dhivyabharath, R. “Arailakkiyathil illara mathipugal.” *Pandian Journal of Womens Studies*, Vol.3, Iss.1, May 2023, ISSN:2583715X, DOI:10.5281/zenodo.7997879.
11. Panjangam, Ka. *Pen – Mozhi – Padaippu.* Kaviya, Chennai, 2007.
12. Prema, R. *Pen Vidudhalaiyum Pennurimaiyum.* Arivu Pathipagam, Chennai, 2008.
13. Pudhuvai Ganakumaran. *Penniya Nokkil Melanmai Ponnusamiin Pudhinangal.* Sinthanai Pathipagam, Pudhuchery, 2007.
14. Marx, Ravikumar, Velusamy (Ed.). *Arasu – Kudumbam – Penniyam.* Vidiyal Pathipagam, Kovai, 1994.
15. Maithili Sivaraman. *Pennurimai Sila Parvaigal.* Tamizh Puthagalaiyam, Chennai, 1995.
16. Varadharajan, M. *Agalvilakku.* Pari Nilaiyam, Chennai, 1995.



**Copyright (c) Author**

**This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.**